செ.வெ.எண் : 04 / ஆகஸ்ட் நாள் : 02.08.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## பொதுமக்கள் பங்களிப்புடன் நீர்நிலைகளை ஆழப்படுத்தும் திட்டத்தின் கீழ் இதுவரை 16,258 விவசாயிகள் மொத்தம் 19.32 இலட்சம் கன அடி அளவில் மண் எடுத்து பயன்பெற்றுள்ளனர்.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், திருப்பாலைக்குடி கிராமப்பகுதிகளில் உள்ள நீர்நிலைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு சீரமைப்பு பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் 01.08.2017 அன்று நேரடியாகச் சென்று கள ஆய்வு செய்தார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் நீர்நிலைகளை பொதுமக்கள் பங்களிப்புடன் தூர்வாரி ஆழப்படுத்திடும் வகையிலும், நீர்நிலைகளில் உள்ள கனிமங்களை தேவைப்படும் விவசாயிகள், மண்பாண்டம் செய்யும் தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ள ஏதுவாகவும் மாவட்ட சிறப்பு அரசிதழ் வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 4586 நீர்நிலைகள் உள்ளன. கண்மாய்கள் மற்றும் ஊரணிகளில் படிந்துள்ள வண்டல் மண்களை எடுத்து சாகுபடி நிலங்களில் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டு அரசிதழில் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து இதுவரை 1,038 நீர்நிலைகளில் 19.32 இலட்சம் கன அடி மண் எடுத்து 16,258 விவசாயிகளின் வயல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் வேளாண்மைப் பணிகளுக்காக வண்டல் மண் தேவைப்படும் விவசாயிகள் இத்திட்டத்தினை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், திருப்பாலைக்குடி கிராமப்பகுதிகளில் உள்ள பெத்தனார்கோட்டை ஊரணி, மயான ஊரணி, பாளையம்மன்கோவில் ஊரணி ஆகிய ஊரணிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள சீரமைப்பு பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் 01.08.2017 அன்று நேரடியாகச் சென்று கள ஆய்வு மேற்கொண்டார். நீர்நிலைகளை ஆழப்படுத்தும்போது நீர்நிலைகளின் கரைகளை சீரமைத்து பலப்படுத்துவதை உறுதி செய்திட வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வின் போது இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.ரா.பேபி , வட்டாட்சியர் திரு.தாமஸ் ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**